உ

கடவுள் துணை.

மதனசுந்தரிஓரடிச்சிந்து.

சென்னை-சூளை.

பு. முனிசாமி நாயுடு

அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

70

கடவுள் துணை.

மதனசுந்தரி ஓரடிச்சிந்து.

டம்பாச்சாரி சொல்லல்.

வண்டுநிகர்மொழியாளே மாவமுதமொழியாளே
தண்டையணிகழலாளே தாரணிந்தக்குழலாளே
அண்டுமதன் துணையாளே அளவிலாவெழிலாளே
மண்டுநடையொயிலாளே மாகுரவிற்குயிலாளே
ஒண்டொடியேமாணிக்கமே-என்கண்ணாட்டி
உனக்கிணைசொல்வதுண்டோ.

மதனசுந்தரி சொல்லல்.

ஆசையுள்ளக்கண்ணாளா அழகியமணவாளா
வாசமணியுயர்தோளா வர்னசோடணிதாளா
வீசுமலர்க்கணைவேளால் வெதுப்பாதென்னைவாளால்
ஈஸ்வரியேயென்னையாளாயென்றுநான்வெகுநாளாய்
பூசைபுரிந்தேனடா-என்கண்ணாளா
புஷ்பங்காத்தெடுத்தே.

டம்பாச்சாரி சொல்லல்.

வட்டமணையின்மீது திட்டமுடனிருந்து
தொட்டுகழுத்தில்தாலி கட்டியவென்னுடைய
மட்டிமனைவியெனும் தாட்டிச்சனவோர்பீச்சை
பிட்டியென்காலினால் எட்டியுதைத்துத்தள்ளி
உந்தனிடவாழ்வதல்லால்-என்கண்ணாட்டி
ஒருவருடன்வாழ்வதுண்டோ.

மதனசுந்தரி சொல்லல்.

கலிக்கித்துராயழகும் கஸ்தூரிப்பொட்டழகும்
சிலுப்பாமினுக்கழகும் சேர்கிருதாவழகும்
தலைப்பாகையினழகும் சரிகைஉருமாலழகும்
நவமாமவடிவழகும் நடையின்ஒயிலழகும்
கண்டபோதேயென்னுடைய-என்கண்ணாளா
கருத்தையுருக்குதடா.

டம்பாச்சாரி சொல்லல்.

வஞ்சியாமிளங்கொடியே மதவாரணப்பிடியே
விஞ்சுமெழிற்பைங்கொடியே மென்மருக்குற்றுடியே
நெஞ்சினிலென்றுங்குடியே நீங்குவனோநொடியே
தஞ்சமுன்மலரடியே தானடைந்தேனடியே
பஞ்சையென்மனையாளைநான்-என்கண்ணுட்டி
பறக்கவடித்திடுவேன்.

மதனசுந்தரி சொல்லல்.

காட்டிக்கொடுத்ததெய்வம் கருணைபுரிந்ததெய்வம்
நாட்டிலுயர்ந்ததெய்வம் நலம்பெறச்செய்ததெய்வம்
பாட்டிலுயர்ந்ததெய்வம் பணிவிடைசெய்யுந்தெய்வம்
கூட்டிக்குடுத்ததெய்வம் குளிர்முகம்பார்த்ததெய்வம்
கும்பகோணத்தெய்வமல்லவா-என்கண்ணாளா
குலதெய்வமவேறுசொல்லவா.

டப்பன் இன்சால்மெண் டாக்டினின்றுந் தப்பித்துக்
கொண்டு மதனசுந்தரி வீட்டிக்குவந்து படுத்திருப்
பவளை எழுப்ப அவள் பராமுகமா யிருப்
பதைக்கண்டு சொல்லுதல்.

தேசுலவுமடமானே தெவிட்டாதசெந்தேனே
ஆசையொடுதினம்நானே அடுத்தின்பஞ்செய்தேனே
வேசிகட்குளுநன்னைத்தானே மேலாகநினைத்தேனே
காசினியளித்தோனே கருத்திலழிவானே
வாசமலர்க்குழல்மயிலே-குயிலே
வருத்தமெனனைதயலாலே.

மதனசுந்தரி தாயை அழைத்து சொல்லுதல்.

பூதலத்தனேகதவம் புரிந்தென்னைப்பெற்றவளே
காதலுடனேவளர்த்துக் கரையேற்றிவிட்டவளே
மாதாவேயாரோவோர் மனிதனருகில்வந்து
பாதாரவிந்தமதில் பணிகுவேனென்றும்
என்-கண்ணேபொன்னே யென்னுங்கார்குயிலே
வண்ணக்கலாபமுடை மாமயிலேயென்று
மூச்சுவிடாமல் மொருகுகிறானோ
காச்சல்குளிரினால் கனவருத்தமடைந்து
ஐந்தாறுநாளாக அன்னபானமில்லாமல
சிந்தைநொந்திருக்குமிந்த ஸ்திதியிலெந்தனுக்கு
மாப்பிள்ளையொன்றுதானே மாநிலத்திலேகுறைவு
தாப்புள்ளசெல்வமெல்லாம் தாறுமாறாகவழித்து

வாரண்டுங்கையுமாக மாட்டிக்கொண்டிருப்பவர்க்கு
தாராண்டுகுழலுடை தாசிவீட்டுக்கென்னவேலை
பேயனைபோகச்சொல்லடி-என்னம்மணி
பேசவும்சிவனில்லடி.

கிழவி-தெம்மாங்கு.

எவண்டிவுன்னைவந்து எழுப்புகிறதுளியவன்
தவடைதனில்போடாமல் தாமதங்கள்செய்வானேன்

டம்பன் சிங்காரச்சிந்து.

நா-நா-நன்னானே-நன்னானே-நன்னானே.

எந்தனாருமைமாமி இன்சால்மெண்டாக்டில்
என்னிடையவல்லமையால் எளிதில்தப்பித்துவந்தேன்
சொந்தவுன்மருமகளாய் சுந்தரியோடுநான்
சொகுசாகவாழ்ந்திருப்பேன் சுகமேயினிமேலம்மா

கிழவி தெம்மாங்கு.

உன்னுடையவல்லமையை உண்மையொடுசொல்வதற்
என்னுடையநாவாலே எவ்வளவுங்கூடுமோடா [கு
அநதமட்டுங்கெட்டிக்கார ஆண்பிள்ளைநீதானப்பா
அவனியிலுனக்கிணை ஆரைசொல்வதப்பா
உந்தனால்நாங்கள்கண்ட தொருகோடியுண்டப்பா
உறவினிலெங்களுக்கு உதவாதநடவப்பா

டம்பன் தெம்மாங்கு.

நன்றிகெட்டகிழப்பிணமே ஞாயமோநீங்களென்னால்
தின்றுவிட்டதிரவியங்கள் தெரித்ததன்றேசிந்தித்தீர்

நாலுலட்சம்விலையுள்ள நகைகள்கொடுத்தேனே
நாலடுக்குமெத்தவீடு நலமாய்கொடுத்தேனே
கோலச்சரிகைசேலை கொஞ்சமோவலித்தது
குணங்கெட்டிப்படிநீங்கள் கூறிலும்போவேனோ

கிழவி தெம்மாங்கு.

பொறிக்கிதின்றநாயேநீபுளுகெங்கேகற்றுகொண்டாய்
நறுக்கிவிடப்போறார்கள் நகைசெய்துவைத்தோர்கள்
கப்பல்துபாசியாலே காப்புக்கிடைத்ததடா
கனகராயவேளாலே கண்டிகிடைத்ததடா
அப்பாராவுவேளாலே மற்றெல்லாம்கிடைத்ததடா
அறிவுகெட்டோனேயுன்ற லனுவமறியோமடா

டம்பன் தெம்மாங்கு.

பலதினமுங்களைநான் பட்சமுடன்கார்த்ததெல்லாம்
யிலவுதனைகார்த்திருந்த வேழைக்கிளிபோலாச்சே
அன்புமிகுமெந்தன் அழகுமனையாளை
அரிதானபிள்ளைகளை அலையவிட்டுங்களுக்கே
இன்பமிகுமென்னுஸ்தி யெல்லாம்தொலைத்தேனே
எள்ளளவாகிலும்நன்றி யில்லாமற்போச்சுதே.

கிழவி தெம்மாங்கு.

குடிக்ககஞ்சியில்லா குடிகேடநாப்பயலே [பயலே
இடிக்கபோறேன்தாடைபார்த் தேதுங்கெட்டவெறிப்
ஆருக்குன்னுஸ்தியெல்லா மளித்தாயதுவல்லாதே
ஆராலேநீயோட்டாண்டி ஆனையதுநீசொல்லடா

சிரும்பேனும்பிடித்த எருமைக்கடாவேயடா
ஏடாகூடங்பேசாதே எடுப்பேன்பழமுறத்தை

டம்பன் தெம்மாங்கு.

நான்கொடுத்ததங்களுக்கு நாலுதலைமுறைக்குண்டே
இத்தனையுமபகரித்தே இப்படிநீயேசுகிறாய்
பத்துலட்சவிலையுள்ள பங்களாகட்டினேன்
பகர்மெத்தையெல்லாம்குளோப்புப்படங்களாக்கினே
எத்தனைவிதலஸ்தர் எழிலாகமாட்டினேன் [ன்
என்னபட்டுங்குடத்தி லிட்டவிளக்காச்சே

கிழவி தெம்மாங்கு.

சிறுக்கிதனைவசப்படுத்த சிங்கைதனிலெண்ணினையோ
செறிப்பாளோவுந்தனுக்குசெருப்புதின்னநாய்மகனே
தந்ததற்கும்வந்ததற்கும் சரிப்பட்டுப்போச்சுதடா
தலைவாசல்மிதியாமல் தப்பித்துக்கொள்ளடா
சொந்தம்பாராட்டிநின்றால் சும்மாயிரேனினித்
துடப்பக்கட்டைமுறியும் சொன்னேன்சொன்னேன்

தாய்க்கிழவி டம்பனுக்கு திரவியங்கிடைத்த பின்வந்து எத்துதல்.

ஆசைமிகுமென்னுடைய அருமைமருமகனே
தேசுலவுமன்மதன்போற் சிறந்தவழகோனே
உத்தமனேசத்தியனே உலகினிற்சீமானே
மெத்தவும்புகழுடைய மேன்மைதருங்கோமானே

நாற்பதுசென்றுக்கால் நாய்க்குணமென்பார்கள்
தோத்திரையானபேய்த் தோஷிநான்தெரியாமல்
மதவுண்டமயக்கத்தால் மதியழிந்துன்னைநான்
இதமில்லாவார்த்தைகள் எத்தனையோபேசிவிட்டேன்
உள்ளமதிலெவ்வளவு மென்றுமலென்னுடைய
தெள்ளுமணியாமதன சிங்காரசுந்தரியை
நித்தியமும்வைத்திருந்து நித்திலக்கழைச்சிலைக்கொள்
சித்தஜன்செருக்கொழிய சித்தமதில்சற்றுகிருபை
செய்யடாவென்சாமி செய்யாவிட்டாலெந்தன்
தையலவள்வெய்யமாரன் பெய்யுமம்பினால்நொந்து
பாசறியவுன்மீதிற் பழிபோடுவாள்சொன்னேன்

சீர்பிலுயர்த்திடுசிங்கமே-தங்கமே
தேசம்புகழ்தங்கமே.

விருத்தம்.

இப்படியிந்த விதமிலாக்கிழவியோடு
மைப்படிகண்றுளென்னு மதனசுந்தரியை
ஒப்புக்கொள்ளாமல்நீக்கி ஒண்டோடிமனையாளோடு
இப்படிதனிமேமிக்க விசையொடுவாழ்ந்திட்டானே,

மதனசுந்தரி ஒரடிச்சிந்து.

முற்றிற்று.